# தெய்வீக சுகமளித்தல்

1

சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

(படங்களுடன்)

தாவீது தன்னுடைய நரம்பிசை
கருவியை இசைப்பதன் மூலமாக
பிசாசுகளைத் துரத்தினான். அவ்வாறு
தான் வேதவாக்கியம் கூறுகிறது



# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: மகத்தான யுத்த வீரனாகிய தாவீது, ஜனவரி 18, 1955, சிகாகோ, இல்லினாய்ஸ், அமெரிக்கா (55-0118)

19. அவர்கள் திரும்பிப் போய்விட்டார்கள், ஆவியானவர் சவுலை விட்டு விலகிச்சென்று விட்டார். ஆவியானவர் அவனை விட்டு போய், ஒரு அசுத்த ஆவி அவருடைய இடத்தை எடுத்துக்கொண்டு, சவுலின் மேல் வரும் அளவுக்கு, அவன் பின்வாங்கி, தேவனை விட்டு மிகவும் தூரமாகப் போய்விட்டிருந்தான்.



சவுல் முற்றிலுமாக அடிக்கடி மனநிலை மாறிக்கொண்டேயிருக்கிறவனாகவும் (moody), முன்கோபம் உள்ளவனாகவும் (bad humor - எரிச்சல்படுகிறவனாகவும்), பொருட்களை சுற்றிலும்போட்டு உதைக்கிறவனாகவும், சில ஜனங்கள் திங்கட்கிழமை காலையில் செய்யத் தொடங்குவது போன்று முழுவதுமாக சிடுசிடுப்புள்ளவனாகவும் (கோபமுள்ளவனாகவும்) இருந்தான்.

எனவே அவர்கள் - அவன் எல்லா நேரமும் எளிதில் கோபங்கொள்கிறவனாக (வெடுவெடுப்பாக) இருந்தான். அது ஒரு அசுத்த ஆவி என்று உங்களுக்குத் தெரியுமா? அது சரியே.

எனவே அவர்கள்... மருத்துவர்களால் நலமான எதையும் அவனுக்குச் செய்ய முடியாதிருந்தது. அங்கே சுற்றிலும் அவர்களுக்கு நிறைய மருத்துவர்கள் இருக்கத்தான் செய்தார்கள், ஆனால் அவர்களால் அதற்கு உதவி செய்ய முடியாதிருந்தது, ஏனென்றால் அது ஒரு ஆவிக்குரிய நிலைமையாக இருந்தது. எனவே அந்த மனிதர்களில் ஒருவன் சுற்றிலும் கடந்து சென்று, ஒரு சில இடங்களைப் பார்த்தபோது, அவர்கள், "நல்லது, ஒரு தெய்வீக சுகமளிப்பவர்

எங்கேயிருக்கிறார் என்று எங்களுக்குத் தெரியும்" என்றார்கள்.

"ஏன், அது யார்?"



"அங்கே வெளியே பின்புறத்திலே ஈசாய்க்கு ஒரு குமாரன் இருக்கிறான், அவன்..." என்றார்கள். **ஆமாம், அவன் ஒரு தெய்வீக சுகமளிப்பவனாக இருந்தான். நிச்சயமாக அவன் அவ்வாறு இருந்தான். அவன் இசையின் மூலமாக சுகமளித்தான். ஆமென். அதைத்தான் அவன் செய்தான். அசுத்த ஆவிகளைத் துரத்தும்படியான ஒரு வரம் அவனுக்கு இருந்தது.** பரிசுத்த

ஆவியானவர் அந்நாட்களில் வந்திருக்கவில்லை, **எனவே அவன் அவைகளை இசையின் மூலமாக, கர்த்தரைக் குறித்துள்ள வசனங்களை வாசிப்பதின் மூலமாக துரத்தினான்.**



**"கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன். அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார்." (உடனே) அந்த அசுத்த ஆவிகள் சவுலை விட்டுப்போகும்**

**பழியாக அது அவைகளுக்கு தொந்தர வாக** (disturbed) **இருந்தது.**



20. நரம்பிசைக் கருவிகளைக் கொண்டு மீட்டப்படும் இசையில் (string music) நம்பிக்கை இல்லாத ஜனங்களாகிய உங்களுக்கு அவமானம். **அசுத்த ஆவிகளுக்கு அது பிடிக்கவே பிடிக்காமல் இருப்பதில் வியப்பொன்றுமில்லை. அவைகள் புறப்பட்டு போக வேண்டியிருக்கிறது.**




**தாவீது தன்னுடைய நரம்பிசை கருவியை இசைப்பதன் மூலமாக பிசாசுகளைத் துரத்தினான். அவ்வாறு தான் வேதவாக்கியம் கூறுகிறது.** அது சரியே. **தாவீது அதை இசைக்கத் தொடங்கின**

**போது, அந்த அசுத்த ஆவி சவுலைவிட்டு வெளியேறினது.** அது சரிதானா? இவ்வாறாக இந்தச் சிறு பையன் ஒரு நோக்கத்திற்காகவே உலகத்தில் பிறந்திருந்தான். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா?









**தேவன் அவனோடு கூட இருந்தார் என்பதை அவன் அறிந்திருந்தான். நிச்சயமாகவே அவன் அறிந்திருந்தான்.** ஏனென்றால் அவனால்... (செய்ய) முடிந்தது.

அவன் துப்பாக்கியால் சுடுவதில் கைதேர்ந்தவனாக இருந்தான் (crack shot); அவன் காடுகளில் வசிக்கும் ஒருவனாயிருந்தான்.





அவனுக்கு அங்கு வெளியில் ஒரு சிறிய கவண்வில் இருந்தது. ஒரு வயதான சிங்கமானது ஒரு... ஐப் பிடித்தது. ஒருநாள் கரடியானது உள்ளே ஓடிவந்து, ஒருசிறு செம்மறியாட்டைப் பிடித்து,

அதனோடு வெளியே போகத் துவங்க, தாவீது தன்னுடைய கவணை எடுத்து, அந்த சிங்கத்தை வீழ்த்தி, அந்த ஆட்டை அதனுடைய வாயிலிருந்து எடுத்துக்கொண்டான். அந்தச் சிங்கம் எழுந்து, தன்னிலை அடைந்து எழும்பினபோது, தாவீது அதனுடைய தாடியைப் பிடித்து, தன்னுடைய வேட்டை கத்தியை அந்தச் சிங்கத்தில் செருக, அது அதை தீர்த்துக்கட்டினது.






எனவே தேவன் தன்னோடு இருக்கிறதை அவன் அறிந்திருந்தான். அவன் அந்தக் கரடியையும்கூட கொன்றுபோட்டான். தேவன் தன்னோடு இருப்பதை அவன் அறிந்திருந்தான்.



இப்பொழுது, அவன் செய்த அடுத்த காரியம் என்னவென்றால், இசையை மீட்டி, பிசாசுகளைத் துரத்தினது தான். அது ஆவியால் நிறைந்த ஒரு மனிதனாக இல்லாமல் இருந்தால், அப்படிப்பட்ட ஒருவனை நான் ஒருக்காலும் கண்டதில்லை. அவன் சிறுவனாகவும் சிவந்த மேனியை உடையவனாகவும் இருந்தான், ஆனால் அவன் ஆவியால் நிறைந்த ஒரு மனிதனாக இருந்தான். தேவன் அவனோடு கூட இருந்தார்.





★★★★★

(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதித் திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதித் திருத்தம் செய்து வெளிவரும்.

**குறிப்பு: இந்தச் சிறு புத்தகத்திலுள்ள படங்கள் அனைத்தும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளன. நன்றி.)**

# இயேசு எதற்காக மரித்தாரே அந்த மீட்பின் ஆசீர்வாதங்கள் எல்லாமே விசுவாசிகளாகிய உங்கள் எல்லாருடைய தனிப்பட்ட சொத்தாக உள்ளது




சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

# *செய்தி:* பெந்தெகோஸ்தே எங்கே தோல்வியடைந்தது என்று நான் எண்ணுவது, நவம்பர் 11, 1955

10. நாம் விசுவாசிக்கிறோம்... இப்பொழுது, அவர் அதைச் செய்திருக்கிறார், நம்மால் மாத்திரம் அவர்கள் அதை விசுவாசிக்கும்படி செய்யக் கூடுமானால்; அதுதான் காரியம். பாருங்கள், **உங்களுடைய இரட்சிப்பைப் போலவே, சுகமும் ஏற்கனவே செய்து முடிக்கப்பட்டு விட்டது**. பாருங்கள், நான், "நீங்கள் எப்போது இரட்சிக்கப்பட்டீர்கள்?" என்று கேட்கிறேன்.

நீங்களும், "ஓ, இரண்டு வருடங்களுக்கு முன்பு, ஐந்து வருடங்களுக்கு முன்பு, அல்லது இருபது வருடங்களுக்கு முன்பு" என்று கூறியிருக்கலாம்.

இல்லை, அது தவறு. இயேசு கல்வாரியில் மரித்தபோதே, 1900 வருடங்களுக்கு முன்பாகவே நீங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டீர்கள். நீங்கள் இரண்டு வருடங்களுக்கு முன்போ அல்லது பத்து வருடங் களுக்கு முன்போ அதை ஏற்றுக்கொண்டீர்கள். புரிகிறதா? அங்கே தான், தேவனுக்குத் தேவையா யிருந்தவைகள் ஆயத்தமாக்கப்படுவதற்கு முன்பாகவே, பாவத்திற்கான கேள்விக்கு தீர்வுகாணப்பட்டது,

கல்வாரியில் முழு கிரயமும் முழுமையாக செலுத்தப்பட்டு விட்டது. மேலும் இப்பொழுது, இயேசு எதற்காக மரித்தாரே அந்த மீட்பின் ஆசீர்வாதங்கள் எல்லாமே விசுவாசிகளாகிய உங்கள் எல்லாருடைய தனிப்பட்ட சொத்தாக உள்ளது. நீங்கள் செய்ய வேண்டிய ஒரே காரியம் என்னவென்றால், வெறுமனே அதை விசுவாசித்து, அதை ஏற்றுக்கொண்டு, அது உங்களுடையது என்று அழைப்பது தான்.

ஒரு மனிதன் தேவனுடைய ஆவியினால் மறுபடியும் பிறக்கும் போது, ஜீவிய பிரயாணம் முழுவதும் அவனுக்கு நீடித்திருக்கும் ஒரு காசோலை புத்தகத்தை தேவன் அவனுக்குக் கொடுக்கிறார். ஒவ்வொரு காசோலையின் கீழேயும் இயேசுவின் பெயர் அதில் கையொப்பமிடப்பட்டிருக்கிறது, நீங்கள் எந்த மீட்பின் ஆசீர் வாதத்திற்காகவும் அதில் எழுதி நிரப்புங்கள் (fill it out). அது உங்களுடையது, ஏற்கனவே கிரயம் செலுத்தப்பட்டு விட்டது. இப்பொழுது, அது பணமாக மாற்றப்படாதோ என்று நிச்சயமாக பயப்பட வேண்டாம். உங்களுக்கு பயம் இருக்கு

**மானால், நீங்கள் அந்த புத்தகத்தை அப்படியே உங்கள் பாக்கெட்டிலேயே வைத்திருங்கள்.**

★★★★★



# இந்நாட்களில் ஒன்றில், தெய்வீக சுகமளித்தலானது ஜனங்கள் மத்தியில் ஒரு மகத்தான காரியமாக இருக்கப் போகிறது

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

## செய்தி: தேவனால் அருளப்பட்ட சுகமளித்தலின் வழி, ஜூலை 19, 1954

நம்முடைய நேரம் போய்க் கொண்டிருக்கையில், இதோ துரிதமாக, ஒரு காரியத்தை நான் கூறட்டும். கவனியுங்கள், கடைசி நாட்களில், அவர்கள் (வைரஸ்) கிருமிகளைக்கொண்டு போர்தொடுப்பார்கள் (germ warfare) என்று வேதாகமம் முன்னுரைக்கிறது என்பதை அறிவீர்களா? அந்த

வியாதிகள் ஜனங்கள் மேல் வெடித்து கிளம்பி, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் இல்லாத எல்லார் மேலும் விழும் என்பது தெரியுமா? ஆனால் அந்த தூதனிடம் அல்லது இந்தக் கொள்ளை நோய்களின் மேல் உத்தரவைக் கொண்டிருந்த தூதனிடம், முத்திரை தரித்திருந்த யாதொருவனையும் தொடக்கூடாது என்ற கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏன், சகோதரர்களே, சபையானது அந்த நிலையில் இருக்கும்படி, அதைக் கொண்டுவரும்படி, அம்மாதிரியான போதகர்களை நாம் எவ்வளவாக கொண்டிருந்தாக வேண்டும்? நோய்

தடுப்பாற்றல் (Immune - நோய் எதிர்ப்பு சக்தி).

மஞ்சள் காய்ச்சல் (கடுமையான தொற்று வியாதி – தமிழாக்கியோன்) மற்றும் அதைப் போன்றவைகளிலிருந்து பாதுகாக்க முயற்சித்து, மருத்துவர்கள் என்னுடைய கைகளில் ஊசிகளை குத்தின இடம் இப்பொழுதும் புண்ணாக உள்ளது. எனக்கு அது தேவையில்லை என்று அவர்களிடம் கூறினேன். ஆனால் அவர்கள் அதைக் கேட்கவில்லை. ஆனால் தேவன் என்ன செய்யப் போகிறார் என்று நான் உங்களுக்குக் கூறுவேன். தேவனிடம் ஒரு நிணநீர்

(serum) உள்ளது, அது பரிசுத்த ஆவி என்று அழைக்கப்படும். அந்த நிணநீர் உள்ளே செல்லும்போது, அதுதான் உங்களை அதிலிருந்து பாதுகாக்கும். அல்லேலூயா. கடைசி நாட்களில்...

43. 1937-ம் ஆண்டில் வெள்ளப்பெருக்கின் போது, ஒரு சமயம் நடந்த காரியம் எனது நினைவுக்கு வருகிறது; எல்லாருமே டைபாய்டு ஊசிகளைப் போட்டிருந்தார்கள். இந்நிலையில், நானோ அதிலிருந்து தப்பித்துக்கொண்டிருந்தேன். அப்போது நான் மின்சார கம்பி முதலியவற்றைப் பழுது பார்த்துப் பேண வேண்டிய பொறுப்புடைய

(lineman) ஒருவனாக இருந்தேன், எனவே நான் வெளியேறி, போய்விட்டேன். யாரோ ஒரு மனிதர் மேலே நடந்து வந்து, "நீர் இன்னும் உம்முடைய ஊசிகளைப் போட்டுக்கொள்ளவில்லையா?" என்று கேட்டார்.

அதற்கு நான், "ஓ, ஆமாம். எனக்கு ஊசிபோடப்பட்டு விட்டது" என்று கூறினேன்.

அவர், "நீர் ஊசி போட்டுவிட்டீர். அது உம்மை நோய்வாய்ப்படுத்தியதா?" என்று கேட்டார்.

நான், "ஓ, இல்லை. இல்லை, நிச்சயமாக அது

நோய்வாய்ப்படுத்தவில்லை" என்று கூறினேன்.

அவர், "நீர் எப்போது ஊசி போட்டுக்கொண்டீர்?" என்று கேட்டார்.

நான், "ஓ, ஏறக்குறைய மூன்று வருடங்களுக்கு முன்பு" என்றேன்.

"மூன்று வருடங்களா? நல்லது, நீர் வேறொரு ஊசியைப் போட்டுக்கொள்ள வேண்டும்" என்றார்.

நான், "ஏறக்குறைய ஒவ்வொரு மணிநேரமும் நான் ஒன்றைப் போட்டக்கொண்டு தான் இருக்கிறேன்" என்றேன். சகோதரனே, நான்... சரி. நான்

அப்படியே தொடர்ந்து அவரிடம் பேசிக் கொண்டேயிருந்தேன்.

44. ஆனால் பார், நண்பனே, அங்கே ஒரு சபை எழும்பும் அந்த நேரம் வருகிறது. நமக்கு தெய்வீக சுகமளித்தலுக்கே விசுவாசத்தைக் கொண்டிருக்க முடியாவிட்டால், எடுத்துக்கொள்ளப்படுதலுக்கேற்ற விசுவாசத்தை நாம் எவ்வாறு கொண்டிருக்கப் போகிறோம்? நண்பனே, நாம் வெளியே போயாக வேண்டும். நாம் இருக்கிற இந்தப் பழைய, மந்தமான சபையின் நிலையை விட்டு வெளியே வந்தாக வேண்டும். நாம் இதிலிருந்து விலகிச் சென்று, நாம் செய்து கொண்டிருக்கும்

காரியங்களிலிருந்து மிகவும் வித்தியாசமான ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்குவோம் (Launch out). கரையோடு இணைக்கும் கயிறுகளை (shorelines) வெட்டி எறிந்து விட்டு, பயம் மற்றும் சந்தேகத்தின் உணர்வுகள் எல்லாவற்றையும் இழந்து, யாவும் கைகூடும் ஏதோவொரு இடத்திற்குள் வெளியே வந்துவிடுவோம், அங்கே வெளியே உங்களால் எவ்வளவு கட்டற்றவிதமாக விடுதலையோடு இருக்க முடியுமோ அவ்வளவு விடுதலையாக வந்துவிடுவோம், சகோதரனே. நீங்கள் உங்கள் கப்பற்பாயை (sail) பரலோகத்தை

நோக்கி பொருத்தி விட்டீர்கள், எதுவுமே உங்களை எந்தவிதத்திலும் கலக்கவே முடியாது. நீங்கள் அந்த வழியாகப் போய்விட்டீர்கள்; அவ்வளவு தான். எதுவுமே உங்களுக்கு தீங்குசெய்ய முடியாது.

இப்பொழுது, வேதாகமத்தின்படி, இந்நாட்களில் ஒன்றில், அது அந்தவிதமான சபையாகத்தான் இருக்கப் போகிறது. (வேதாகமத்தில்) அங்கே அந்தத் தூதன் அவருடைய கோபாக்கினையை ஊற்றி, வியாதிகள் வெடித்துக்கிளம்பின போது, மனிதர்கள் தாங்கள் நின்று கொண்டிருக்கும் இடத்திலேயே அவர்களுடைய மாமிசமும் (flesh – சதை, உடம்பு, தசை –

தமிழாக்கியோன்) கூட அழுகிப்போய்விடும். ஆகாயத்துப் பறவைகள் இறங்கிவந்து, தலைமை படைத்தலைவர்கள் (chief-captains – தலைமை அதிகாரிகள், தலைமைப்பணியாளர்கள், தலைமை படைப்பிரிவுத் தளபதிகள், தலைமை கடற்படைத்தளபதிகள், தலைமை இராணுவத் தலைவர்கள், தலைமை கப்பற்குழு முதல்வர்கள்), மற்றும் மகத்தான மனிதர்கள், ஜனாதிபதிகள் (presidents - குடியரசுத்தலைவர்கள், கூட்டத்தலைவர்கள், மன்றத்தலைவர்கள், அவைத்தலைவர்கள், தலைமை அதிகாரிகள், அரசுத்தலைவர்கள்,

தலைவர்கள்), யுத்தவீரர்கள் (warriors - மாவீரர்கள், போர்வீரர்கள், படைவீரர்கள்), இராஜதூதர்கள், (diplomats - ராஜ்யப்பிரதிநிதிகள், அரசு தூதர்கள்), ஆட்சியாளர் (potentates - வல்லுநர்கள், ஆட்சி செய்பவர்கள், ஆளுநர்கள், அதிபதிகள், ராஜாக்கள்), மற்றும் எல்லாருடைய புயங்களையும் (shoulders - தோள், தோட்பட்டை, தோட்பட்டை இறைச்சி, தோட்கட்டு, புஜம்), படிப்படியாக தின்று அழிக்கும் (eat off), மேலும் அவர்களுடைய மாமிசத்தையும் தின்னும். தின்னும்... ஆனால், "தங்கள் நெற்றியில் தேவனுடைய

முத்திரையைப் பெற்றிருக்கிற யாருடைய அருகிலும் வராதே" என்று அந்த தூதனுக்கு கட்டளையிடப்பட்டிருக்கிறது. அது ஒரு... இருக்கப் போகிறது. இந்நாட்களில் ஒன்றில், தெய்வீக சுகமளித்தலானது ஜனங்கள் மத்தியில் ஒரு மகத்தான காரியமாக இருக்கப் போகிறது. எனவே நாம் நிபந்தனைக்குள் வந்துவிடுவோம். நாம்... என்று தேவன் விரும்புகிறார்.

நீங்கள், "நல்லது, சகோதரன் பிரன்ஹாமே, நீங்கள், 'நாம்' என்று கூறுகிறீர்களே" என்று சொல்லலாம். அதன்பேரில் தான் தேவன் காத்துக் கொண்டிருக்கிறார். தேவன்... நாம் இயேசு திரும்பி வருவதற்காக

காத்துக் கொண்டிருக்கிறோம், இயேசுவோ நம்பேரில் காத்துக் கொண்டிருக்கிறார். நீங்கள், “நல்லது, எவ்வாறு, அதைக் குறித்து நம்மால் என்னதான் செய்ய முடியும்?” என்று கேட்கலாம்.

வேளை வந்தது என்றும், அவருடைய மணவாட்டி தன்னை ஆயத்தம் செய்து விட்டாள் என்றும் (அல்லேலூயா.), அவள் தன்னை ஆயத்தம் செய்து விட்டாள் என்று வேதாகமம் கூறுகிறது.

★★★★★

(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)

# இரட்சிப்பு எவ்வாறு எல்லோருக்கும் சொந்தமோ, அது போல, தெய்வீக சுகமளித்தலும் விரும்புகிற யாவருக்கும் உரியது



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

செய்தி: சாலமோனைக் காட்டிலும் பெரியவர் இங்கே இருக்கிறார், 57-0228, பத்தி எண் E-5

ஓ, **தெய்வீக சுகமளித்தல் என்பது** குலமரபு சின்னங்கள் செதுக்கியுள்ள ஒரு கம்பம் அல்ல; அல்லது **அது ஒரு ஏமாற்று வித்தையும் அல்ல. அது தெய்வீக சத்தியம், தேவனுடைய வார்த்தையில் எழுதப்பட்டுள்ளது, பரிசுத்த ஆவியினால் உறுதிப்படுத்தப்பட்டதாகும். அது எந்த ஒரு ஸ்தாபனத்திற்கும், ஜனங்களுக்கும், கொள்கைகளுக்கும், நிறங்களுக்கும் உட்பட்டதல்ல. இரட்சிப்பு எவ்வாறு எல்லோருக்கும் சொந்தமோ, அது போல, தெய்வீக சுகமளித்தலும் விரும்புகிற யாவருக்கும் உரியது. அது ஏற்கனவே செய்து முடிக்கப்பட்ட கிரியையாகும்,** கர்த்தராகிய இயேசுவின் கொடூரமான பாடுகளிலும், அவருடைய ஜெயமான உயிர்த்தெழுதலிலும் நாம் கொண்டுள்ள விசுவாசத்தின் மூலம் நாம் அதை ஏற்றுக்கொள்கிறோம்.

# நீங்கள் அதை ஏற்றுக்கொண்டு, அதை விசுவாசிக்கும் போது, அது உங்களுடையதாகி விடுகிறது



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

20. அது உங்களால் - உங்களால் சுகமாக முடியாது என்பதற்கு அர்த்தமல்ல. **இயேசு கிறிஸ்து உங்களைச் சுகப்படுத்துகிறார் என்று விசுவாசிக்கிற நீங்கள் எங்கேயிருந்தாலும் சுகமடைய முடியும் (பாருங்கள்?), நீங்கள் எங்கேயிருந்தாலும். நீங்கள் எப்போதுமே அதை நினைவில் கொள்வீர்களா? அதை எப்போதும் நினைவில் வையுங்கள், சுகத்தைப் பெற்றுக்கொள்ளுதல்...**

**கிறிஸ்துவினால் உங்களுக்காக செய்ய முடிந்தது எல்லாமே ஏற்கனவே செய்யப்பட்டாயிற்று.** ஆமென். புரிகிறதா? **கிறிஸ்துவும் தேவனும் உங்களுக்காக செய்யக்கூடிய எல்லாம் ஏற்கனவே செய்து முடிக்கப்பட்டு விட்டது.** இப்பொழுது, அடுத்த காரியமாக உங்களுக்குள்

வைக்கப்பட்டுள்ளது. **நீங்கள் பாவியாக இருந்தால், இயேசு ஏற்கனவே உங்களை இரட்சித்திருக்கிறார், ஆனால் நீங்கள் - உலகத்தின் பாவத்தைப் போக்கும்படியாக அவர் மரித்த போது, (அது செய்யப்பட்டது), ஆனால் நீங்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.** நீங்கள், "சகோதரன் பிரன்ஹாமே, நீர் வீட்டிற்குப் போவதற்கான வழி பயணக் கட்டணத்தை நான் செலுத்தி விட்டேன்" என்று கூறலாம்.

**நல்லது, நான் அதை ஏற்றுக்கொண்டாலொழிய அது எனக்கு எந்த நன்மையும் செய்யாது. நீங்கள் அதை ஏற்றுக்கொள்ளும் மட்டுமாக கிறிஸ்துவினுடைய மரணம் உங்களுக்கு உதவி செய்யாது.** இப்பொழுது, "**அவருடைய தழும்புகளால் நீங்கள் குணமானீர்கள்.**" **அவர் உங்களுக்காக பரிகாரத்தைச் செய்த போதே அவர் உங்களைக் குணமாக்கி விட்டார். ஆனால் இப்பொழுது, நீங்கள் அதை**

**ஏற்றுக்கொள்ளும் மட்டுமாக அது உங்களுக்கு ஒருபோதும் எந்த நன்மையும் செய்யாது. நீங்கள் அதை ஏற்றுக்கொண்டு, அதை விசுவாசிக்கும் போது, அது உங்களுடையதாகி விடுகிறது.** இப்பொழுது, பாருங்கள், **அது உங்களைப் பொறுத்தது.** இப்பொழுது, அவர் செய்கிற இந்தக் காரியங்கள், அந்தக் காரியங்களை நிரூபிக்கும்படியாக அவர் அடையாளங்களையும் அற்புதங்களையும் அனுப்புகிறார், அது-அது செய்யப்பட முடியும்.

*செய்தி:* **இரண்டாம் அற்புதம்**, ஜூலை 22, 1951, டுலிடோ, ஒஹியோ, அமெரிக்கா

# அதை சாத்தானிடமே தள்ளி விடுகிறேன்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

ஒருவார காலமாக, சில நிமிடங்களுக்கு ஒரு முறை என் ஜலதோஷத்தை பிசாசுக்குத் திரும்ப அளித்துக் கொண்டிருந்தேன். உங்களுக்குத் தெரியுமா, ஒவ்வொரு முறை அவன் அதை எனக்குத் தந்தபோது, அதை அவனுக்கே திரும்ப அளித்துக் கொண்டிருந்தேன். நாங்கள் இன்னமும் போராடிக் கொண்டிருக்கிறோம். அவன்தான் அதை வைத்துக் கொள்ள வேண்டுமென்று நான் தீர்மானித்து விட்டேன். பாருங்கள், ஒவ்வொரு முறையும் அவன் அதை எனக்குத் தரும்போது, அதை அவனிடமே தள்ளி விடுகிறேன். அவன் அதை மறுபடியும் கொடுப்பதில் மிகவும் சமர்த்தன் என்று உங்களுக்குத் தெரியும். அதை எப்படி

செய்வதென்று அவன் நன்கு அறிந்திருக்கிறான். அன்றிரவு நான் கூறினது போல், முடிவில் நாம் அவனுடைய பொறுமையை போக்கி விடுவோம்.

ஒருமுறை ஒருவனுக்காக ஜெபம் ஏறெடுக்கப்பட்டபோது, அவன், "நான் சுகமடையவில்லை என்று பிசாசு என்னிடம் கூறினான். நான் பார்த்தபோது, வியாதியின் அறிகுறிகள் அத்தனையும் துவக்கத்தில் இருந்தது போலவே இருந்தன. நான், 'சாத்தானே, நான் எந்த வித்தியாசத்தையும் காணவில்லை என்பது உண்மைதான். ஆனால் என்ன தெரியுமா? அவை என்னை விட்டுச் செல்லும் வரைக்கும், நான் தேவனுடைய மகிமைக்கென்று

மும்முரமாக சாட்சி கூறப்போகிறேன். எனவே நீ இருந்து கொண்டு நான் கூறுவதைக் கேட்க விரும்பினால், அப்படியே செய்'" என்றானாம்.

அதுவே உண்மையான விசுவாசம். தேவனுடைய மகிமைக்கென்று சாட்சி கூறுங்கள்! ஏனெனில் "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது." பாருங்கள்? நீங்கள் விசுவாசத்தை கண்களால் காண முடியாது. அதை நம்புகிறீர்கள் – விசுவாசத்தை.

*விளங்காத சத்தம், டிசம்பர் 18, 1960, பத்தி எண் 1-3*

# கோழைகளுக்கு இடமில்லை



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

நம்மை சோதிப்பதை அவர் நேசிக்கிறார் என்று உங்களுக்குத் தெரியுமா? உங்களுடைய விசுவாசத்தின் கிரியை என்னவாக இருக்கிறது என்பதைக் காண வாஞ்சிக்கிறார். உங்களுக்கு அது தெரியுமா? நீங்கள் எப்படி செயல்படுகிறீர்கள் என்பதைக் காண வாஞ்சிக்கிறார். “ஓ, கர்த்தாவே, நான் உம்மை விசுவாசிக்கிறேன்; நீர் என்னுடைய இரட்சகராக இருக்கிறீர். நீர் சுகமாக்குகிறவர் என்று நான் விசுவாசிக்கிறேன்; நீரே பரிசுத்த ஆவியை அருளிச் செய்கிறீர் என்று நான் விசுவாசிக்கிறேன்; எனக்குத் தேவைப்படும் பொருள்களை கொடுக்கிறவர் நீர் என்று விசுவாசிக்கிறேன். அவைகளைக்

கொடுக்கிற தேவன் நீரே" என்று நீங்கள் சொல்லும் போது. அதன்பிறகு, நீங்கள், உங்களுடைய எல்லா பாவங்களையும் அறிக்கை செய்து, நீங்கள் என்ன செய்வீர்கள் என்று தேவனுக்கு வாக்குக் கொடுக்கும் போது, அவர் உங்களுக்கு சுகத்தை அளிப்பாரானால், அதன் பிறகு அது சம்பவிக்கவில்லையென்றால், ஒரு கோழையைப் போல எங்கோ ஓடுகிறாய். தேவன் அதைப் பயன்படுத்த மாட்டார். உன்னைப் பயன்படுத்துவதற்கு அவருக்கு ஒரு வழியும் இல்லை. உங்களுக்குப் பதிலளிக்க அவருக்கு ஒரு வழியும் இல்லை, ஏனென்றால், விசுவாசத்தினாலே மாத்திரம் பதிலளிக்கிறவராயிருக்கிறார். பின்

சடுதியில் நீங்கள் அங்கிருந்து சென்று விடுகிறீர்கள். அவரால் பதிலளிக்க முடியாது. ஆனால், உண்மையான, நிஜமான விசுவாசம் அங்கு நிலைத்து நின்று, தேவன் இருக்கிறார் என்னும் நிச்சயத்தை உடையதாய் இருக்கும். அவர் இருக்கிறார் என்னும் நிச்சயம் உடையவர்களாய் இருங்கள்.

*தேவனைக் குறித்த நிச்சயம் உடையவர்களாயிருங்கள், 59-0125, பத்தி எண் 46*

தேவன் ஒரு கோழையல்ல. உங்களுடைய சுகத்தைக் குறித்தோ அல்லது உங்களுடைய இரட்சிப்பைக் குறித்தோ சாட்சி கூறப் பயப்படும் கோழைகளை அவரால் பயன்படுத்த முடியாது; அவர் உன்னைப் பயன்படுத்த

**முடியாது; நீ ஒன்றுக்கும் உதவாதவன். பாருங்கள்?**

***பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது போதும், 56-0422, பத்தி எண் E-56***

★★★★★

# ஒரு மன்னிப்பு மன்னிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டா லொழிய, அது ஒரு மன்னிப்பாகாது



ஆபிரகாம் லிங்கன்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

*செய்தி:* **வாசல்களுக்குள்ளே வாசல்கள்,** பிப்ரவரி 6, 1965

89. திரு. லிங்கன். ஒரு மனிதன், ஒரு வாலிப நபர், அவன்அவன் யுத்தத்தில் இருந்தான். மேலும் அவன் துவக்கத்திலேயே கோழையாயிருந்தான். எனவே கடமையின் நேரத்தில் அவன் - அவன் - அவன் தன்னை போர் படையிலிருந்து விலக்கிக் கொண்டான். எனவே அவர்கள் அவனுக்கு விரோதமாக ஏதோ காரியத்தை கண்டுபிடித்தனர். ஆகையால் அவன் சுட்டுக் கொல்லப்படப் போவதாக இருந்தான். ஓ, அவன் ......... அது பயங்கரமாயிருந்தது. அப்பொழுது அவனை மிகவும் நேசித்த ஒரு வாலிப நபர் ஒரு மன்னிப்பு கடிதத்தைப் பெறும்படி திரு. லிங்கனண்டைக்குச் சென்றான். அந்த நேரத்தில் அவர் இங்கே ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதியாக இருந்தார். எனவே அவன் மன்னிப்பிற்காக அவரிடம் சென்றான்.

90. அவர் தன்னுடைய வண்டியிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தபோது அவன் அவரிடம் கூறினான்: திரு. லிங்கன் அவர்கள் உயரமானவராயும், தாடியுடையவராயும், தெற்கத்தியர்களின் பாணியில், ஒல்லியான உருவம் கொண்டவராயும் இருப்பார். அவன், "திரு. லிங்கன்

அவர்களே, இன்னும் இரண்டு நாட்களில் ஒரு பையன் சுட்டு கொல்லப்படப் போவதாக இருக்கிறான். ஏனென்றால், அவன் யுத்த நேரத்தில் ஓடிவிட்டான்" என்றான். அப்பொழுது அவன், "திரு. லிங்கள் அவர்களே, அந்தப் பையன் ஒரு மோசமான பையன் அல்ல. ஆனால் துப்பாக்கிக் குண்டுகளால் சுடப்பட்டு, ஜனங்கள் மரித்ததைக் கண்டு அவன் பயமடைந்துவிட்டான். அவன் மிகவும் நிலைகுலைந்தவனாக, அவன் தன்னுடைய கரங்களை மேலே தூக்கியவாறு கூச்சலிடத் துவங்கினான்" என்றான். ஆனால், "நான் அந்த பையனை அறிந்திருக்கிறேன்" என்றான். மேலும் அவன், "திரு. லிங்கன் அவர்களே, இந்த துண்டு காகிதத்தின் மேல் உள்ள உங்கள் பெயரினால் மட்டுமே அவனை காப்பாற்ற முடியும். எனவே நீர் அதைச் செய்வீரா?" என்று கேட்டான்.

91. உண்மையான, இந்த கிறிஸ்தவ பெருந்தகையாளர் உடனடியாக அந்த காகிதத்தில் "இன்னார் - இன்னாரை" மன்னிக்கிறேன் என்று எழுதி கையெழுத்திட்டார். மேலும், "ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதி, ஆபிரகாம் லிங்கன்" என்று தன்னுடைய பெயரை கையொப்பமிட்டார்.

92. செய்தியாளனோ, தன்னால் முடிந்த அளவு துரிதமாக அதைக் கொண்டு சென்றான்.

அவன் அந்த சிறைக்கூட தனியறைக்கு ஓடி, "நீ விடுதலையாகிவிட்டாய்! நீ விடுதலையாகி விட்டாய்! இதோ இருக்கிறது திரு. லிங்கனுடைய, திரு. லிங்கனுடைய கையெழுத்து, நீ விடுதலையாகிவிட்டாய்" என்றான்.

93. அப்பொழுது அவன், "நாளை நான் மரிக்கப் போகிறேன் என்பதை அறிந்தும், நீ ஏன் என்னை பரியாசம் செய்ய வந்திருக்கிறாய்?" என்றான். மேலும் அவன், "அதை இங்கிருந்து கொண்டு போ, நீ மாத்திரமே என்னை பரியாசம் செய்து கொண்டிருக்கிறாய்" என்றான். அவன் அதை ஏற்றுக்கொள்ள மனதாயில்லை. அவன், "வேண்டாம், எனக்கு - எனக்கு அது தேவையில்லை" என்றான். அவன், "நீ மாத்திரம் பரியாசம் செய்து கொண்டிருக்கிறாய் ......." என்றான். மேலும் அவன், "அது ஜனாதிபதி கையெழுத்தாக இருந்தால், அப்பொழுது அதில் அரசாங்க முத்திரைகள் இருந்திருக்குமே, அது அவருடைய சரியான தாளில் இருந்திருக்குமே" என்றான்.

இவனோ, "ஆனால் இது அவருடைய கையெழுத்துத்தான்" என்றான்.

94. அப்பொழுது அவன், "நான் எப்படி அவருடைய கையெழுத்தை அறிந்துகொள்வேன்?"

என்று கேட்டான். மேலும் அவன், "நீ என்னை வெறுமனே பரியாசம் பண்ணிக் கொண்டிருக்கிறாய் என்றும், நீ என்னை சாந்தப்படுத்த முயற்சித்துக் கொண்டிருக்கிறாய்" என்றும் கூறினான். பின்னர் அவன் அப்படியே கூச்சலிடத் துவங்கி தன்னுடைய முதுகை திருப்பிக் கொண்டான். பின்னர் அடுத்த நாள் காலை அந்தப் பையன் சுட்டுக் கொல்லப்பட்டான்.

95. அவன் மன்னிக்கப்பட்டான் என்று ஜனாதிபதியினுடைய பெயர் இந்தத் துண்டுத்தாளில் இருந்தபோதும், அந்தப் பையன் கொல்லப்பட்டிருக்கிறான். அப்படியானால் என்ன? அவர்கள் அதற்காக தலைமை வழக்கு மன்றத்தில் வழக்கு தொடுத்தனர். அப்பொழுது நம்முடைய தலைமை நீதிமன்றத்தின் தீர்மானம் இவ்வாறிருந்தது. நம்முடைய நீதிமன்றங்கள் யாவற்றிற்கும் அதுவே கடைசி முடிவாக இருக்கிறது. சில நேரங்களில் அவர்கள் கூறுகிறதை, நாம் அவர்களுடைய தீர்மானத்தை விரும்புகிற தில்லை. ஆனாலும் நாம் எப்படியிருந்தாலும் அதனைக் கொண்டே நிலைத்திருக்க வேண்டிய வர்களாயிருக்கிறோம். பாருங்கள், ஏனென்றால் அதுவே கட்டுக் கம்பமாய் இருக்கிறது. அதுவே கடைசி முடிவாயிருக்கிறது. இப்பொழுது அதில்

கூறப்பட்ட தீர்மானம் என்னவெனில், "**ஒரு மன்னிப்பு மன்னிப்பாக ஏற்றுக் கொள்ளப்பட்டாலொழிய, அது ஒரு மன்னிப்பாகாது**" என்பதேயாகும்.

96. **அந்த விதமாகவே தேவனுடைய வார்த்தையும் இருக்கிறது. அது ஒரு மன்னிப்பாக ஏற்றுக்கொள்ளப்படுமானால், அது ஒரு மன்னிப்பாயிருக்கிறது. அதை விசுவாசித்து அதை ஏற்றுக்கொள்பவர்களுக்கு அது தேவனுடைய வார்த்தையாயும், தேவனுடைய வல்லமையுமாயிருக்கிறது.**

97. நீங்கள் அதை நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்து, "ஓ, அது சிக்கிக்கொண்டுள்ளது, மேலும் அது இலட்சக்கணக்கான மொழி பெயர்ப்புகளை உடையதாய் இருந்து வருகின்றது" என்று நீங்கள் கூறினாலும் கவலைப்படுவதற்கில்லை. அது யாரோ ஒருவருக்காக இருக்கலாம்.

98. **ஆனால் எனக்கோ அது இன்னமும் தேவனுடைய வார்த்தையாகவே இருக்கிறது.** "**இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும்**

மாறாதவராயிருக்கிறார்". அவர் அந்த வார்த்தையைக் கொண்டு தரித்திருக்க கடமைப்பட்டவராயிருக்கிறார்.

99. இப்பொழுது அவர் ஓர்நாள் சபையை நியாயந்தீர்க்க வேண்டியவராயிருக்கிறார். **அவர் அதை கத்தோலிக்க சபையைக் கொண்டு நியாயந்தீர்ப்பார் என்று அவர்கள் கூறுவார்களேயானால் அப்பொழுது அவர் கத்தோலிக்க சபைகளில் எந்த ஒன்றைக்கொண்டு நியாயந்தீர்ப்பார்? அவைகள் ஒன்றுக்கொன்று வித்தியாசமாக உள்ளதே. அவர் அதை மெத்தோடிஸ்டுகளைக் கொண்டு நியாயந்தீர்ப்பாரேயானால், அப்பொழுது பாப்டிஸ்டுகளாகிய நீங்கள் இழக்கப்படுவீர்கள். அவர் அதை பெந்தேகோஸ்துக்களைக் கொண்டு நியாயந்தீர்ப்பாரேயானால் அப்பொழுது மீதமுள்ள நீங்கள் இழக்கப்படுவீர்கள்.**

100. **ஆனால் அவர் அதை சபையைக் கொண்டு நியாயந்தீர்க்க மாட்டார். வேதம், "அவர் உலகத்தை இயேசு கிறிஸ்துவைக் கொண்டு நியாயந்தீர்ப்பார். ஏனெனில்**

**கிறிஸ்து வார்த்தையாக இருக்கிறார்" என்று கூறியுள்ளது.** ஆகையால் நீங்கள் பாருங்கள், **நாம் சாக்குப்போக்கு கூறமுடியாதவர்களாக இருக்கிறோம். அது தேவனுடைய வார்த்தையாக இருக்கிறது. அதனைக் கொண்டே அவர் நம்மை நியாயந்தீர்ப்பார். அது எவ்வளவு சிறியதானாலும் அது ஒரு பொருட்டல்ல. வெளிப்படுத்தின விசேஷம் 22:18ல் ஒரு வார்த்தை எவ்வளவு சிறப்பு வாய்ந்தது என்று கூறப்பட்டுள்ளது.**

*(இந்த மேற்கோள் ஏற்கனவே தமிழில் வந்த செய்தியிலிருந்து எடுக்கப்பட்டது.)*

உங்களுடைய வியாதியிலிருந்தும்,
உங்களுடைய பாடுகளிலிருந்தும்
உங்களுடைய சிந்தையை (நினைவை)
எடுத்துப் போடுங்கள். உங்களுடைய
கண்களை இயேசுவின் மேல்
வையுங்கள்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

தண்ணீர் சூழ்ந்து படகு கவிழும் நிலை உண்டானது, அதற்குப் பிறகு, இயேசு பேசினார், “இது நான் தான், பயப்படாதிருங்கள்” என்று கூறினார்.

பேதுரு, “அது நீரேயானால், கர்த்தாவே, சிறிய சோதனையை எனக்குக் கொடும்” என்று கேட்டார். கேளுங்கள், அப்போது நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள். ஆகவே அவர், அவனுக்கு சோதனையைக் கொடுத்தார். அதைச் செய்வதற்கு அவருக்குள் அவர் முயற்சி செய்த போது, தோல்வியைக் கண்டார், மற்ற ஒவ்வொரு மனிதனும் தோல்வியடைவர். அவர் இயேசுவையே நோக்கிப்பார்த்துக் கொண்டிருந்த கண்களைத் திருப்பி, அலைகள் எவ்வளவு பெரிதாய் இருக்கின்றன என்று பார்க்கத் தொடங்கினார். அந்த

அலைகள் எதிராக இருந்ததை அவர் பார்த்த போது, அவர் மூழ்க ஆரம்பித்தார். ஒவ்வொரு மனிதனும், அவனுடைய வியாதிக்காக ஜெபித்த பிறகு, அவன் தன்னுடைய வியாதியின் வேதனைகளை நோக்கிப் பார்ப்பானேயானால், அவன் மூழ்கிப்போவது நிச்சயம்.

உங்களுடைய பாடுகளையே நோக்கிப் பார்க்க வேண்டியதில்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேல், வாக்குக் கொடுக்கிறவர் மேல் உங்கள் கண்களை வையுங்கள். அவருடைய வார்த்தையில் உங்கள் கண்களைப் பதியுங்கள். அவரே ஒருவரே வாக்குப் பண்ணினவர். அதை நிறைவேற்றுவதற்காக, அவ்வாக்குத்தத்தங்களை கவனித்துக்

கொண்டேயிருக்கிறார். அவருடைய உள்ளங்கையில் வைத்திருக்கிறார். அவருடைய இருதயத்தின் ஆழத்தில் பதிந்து கிடக்கிறது. அவருடைய வார்த்தை சத்தியமாக இருக்க வேண்டும்.

உங்களுடைய வியாதியிலிருந்தும், உங்களுடைய பாடுகளிலிருந்தும் உங்களுடைய சிந்தையை, (நினைவை) எடுத்துப் போடுங்கள். உங்களுடைய கண்களை இயேசுவின் மேல் வையுங்கள்.

*ஒரு இரகசிய விசுவாசியாகிய யவீரு, 55-0604, பத்தி எண் E-38*

★★★★★

# நீ அதை விசுவாசிக்க மாத்திரம் வேண்டும்



நீ ஒரு கிறிஸ்தவன். இயேசு உனக்காக மரித்து சம்பாதித்த இரட்சிப்பின் எல்லா ஆசீர்வாதங்களுக்கும் உனக்கு உரிமை உண்டு. அவைகளெல்லாம் உன்னுடையதே! அதற்காக எல்லாம் செலுத்தப்பட்டு விட்டது. நீ அதை விசுவாசிக்க மாத்திரம் வேண்டும். அது கற்பனையல்ல; ஆனால் அதை விசுவாசி. மேலும் அது உன்னுடையதென்று உனக்குத் தெரியும். மேலும் நீ அதை உன்னுடைய சொந்தமாக்கிக் கொள்கிறாய். ஓ! அதுவே வெற்றி சிறக்கப் பண்ணுகிற விசுவாசம்; தெரிந்து கொள்!

சகோ. பிரன்ஹாம்

செய்தி: பரிபூரண விசுவாசம், பத்தி எண் 146

*Only believe,*
*Only believe*
*All things are possible,*
*Only believe.*

**சகோ. பினேகாஸ்**
**போன்: 8838623242, 9551855108**